தமிழ் மொழிபெயர்ப்பு.

## DIWAN BAHADUR

# Muthuramaswami Kalingarayar Avergal

## POLIGAR OF UTTUKULI

AND

## Sri A. M. Krishnaswami Kalingarayar

**KUMARA POLIGAR OF UTTUKULI**

**Translated from "The Ruling Chiefs, Nobles and Zamindars of India"**

**by**


**A. VADIVELU,**

*Late Sub-Editor, "Evening Mail,"*

AUTHOR OF

*"Some Mysore Worthies,"*

*"Two Worthies of Southern India,"*

*"The Aristocracy of Southern India,"*

*Volumes I and II,*

etc., etc., etc.



THE POLIGAR OF UTTUKULI

ஸ்ரீமான் திவான் பகதூர்

# மூத்து இராமசுவாமி காளிங்கராயர் அவர்கள்

## ஊத்துக்குளி பாளையக்காரர் (கோயம்பத்தூர் ஜில்லா)

காளிங்கராயர் அவர்களுடைய குடும்பத்தைப் பற்றிய சரித்திரங்கள், திப்பு சுல்தான் மைசூரை யாண்ட காலத்தில் நடந்த குழப்பத்தில் எவ்விதமாகவோ இழந்துவிடப்பட்டன. பழைய கையெழுத்துப் பிரதிகளிலும், பரம்பரையாக வழங்கிக் கொண்டிருந்தவைகளிலும், ஊத்துக்குளியின் பதின்மூன்றுவது பாளையக்காரரான முத்து இராமசுவாமி காளிங்கராயரவர்களின் ஒழுகுக் கணக்குகளிலும் இருந்து சேகரிக்கப்பட்ட கொஞ்சம் விஷயங்களே இப்போது நமக்குக் கிடைத்துள்ளவை. இந்த ஒழுகுக் கணக்குகள் என்பவை விஷு வருஷம் பங்குனிமீ 25உ ஓலையில் வரையப்பட்டு இன்னும் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் வமிசாவளி கைபீயத்துகள் ஆகும்.

சோழ அரசர்களில் ஒருவரான ஆதொண்டைச் சக்கிரவர்த்தியின் காலத்தில், மிக்க புராதன பாரம்பரையாகிய ஸதாக்கை கோத்திரத்தைச் சேர்ந்த காளிங்கன் என்பவர், அக்காலத்தில் பலம் பொருந்திய கூட்டத்தவராகிய வேளாளர்கள் வசித்திருந்த பெரிய காடு நடுமண்டலத்தை யாண்டு வந்தார். ஆதொண்டைச் சக்கிரவர்த்தி சேரபாண்டிய அரசர்களின் உதவியைக் கொண்டு நடுமண்டலத்தைக் கைப்பற்றிக்கொண்டார். அதன் பின் அவர் வேளாளரைத் தங்கள் பலம் பொருந்திய இடத்திலிருந்து சிதறடிக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டு, அவர்களிற் சிலரைச் சேர அரசரோடும், சிலரைப் பாண்டிய அரசரோடும் அனுப்பிவிட்டார். அப்போது சதாக்கை காளிங்கராயர் சேர அரசனோடு கொங்கநாட்டிற்குச் சென்றார்.

அவர்கள் சேர இராஜனுக்குப் பரிசாயளிக்கப்பட்டார்கள் என்றும் அந்த அரசன் சோள இராஜன் புத்திரியாகிய இரிஷபத்ரி என்பவளை மணம்புரிந்தானென்றும் இன்னொரு சரித்திரமுண்டு. அது எப்படியாயினும் அவர்கள் ஒரு காலத்தில் கொங்கநாட்டில் குடியேறினார்கள் என்பது நிச்சயம். அக்காலத்தில் இத்தேசம் பெரும்பாலும் காடடர்ந்ததாக விருந்ததோடு இருபத்துநான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது.

அப்பிரிவுகளில் பூந்துறை யென்பதொன்று. அது முப்பத்திரண்டு கிராமங்களடங்கியது. அப்பாகம் சதாக்கை காளிங்கராயருக்கு அளிக்கப்பட்டது. அவர் அப்பாகத்தின் தலைவராக்கப்பட்டு வெள்ளோடு என்ற ஸ்தலத்தைத் தமது தலைமை ஸ்தானமாக வைத்துக்கொண்டார். அவர்

அங்கு பாடகவல்லி நாச்சியார்க்காக ஒரு கோயிலைக் கட்டி வைத்தார். அவர் கருரிலிருந்த தன் மைத்துனராகிய பண்ணைக்குளத்தான் என்பவரிடம் சென்று அவர் புத்திரியைத் தன் சொந்த மைந்தனுக்களிக்கும்படி கேட்டார். அதைப் பற்றி நிச்சயம் செய்துகொள்ளப்பட்டது. ஆயினும் ஒரு அற்ப சம்பவம் நேர்ந்து கலியாணம் நடப்பதில் காலதாமதத்தை யுண்டாக்கிவிட்டது. அதாவது, அவர் அங்கு தங்கியிருக்கையில் பெண்வீட்டிலுள்ள சமையற்காரன் தன் எஜமானிடம் சென்று, வந்திருக்கும் விருந்தினர்க்கு நாணயமான அரிசி சமைக்க வேண்டுமோ அல்லது முரட்டரிசியே சமைக்கலாமோவென்று வினவினான். அதற்கு, எஜமானாகிய பண்ணைக்குளத்தான் "கொல்லை மேடுகளில் வசிப்பவர்களுக்கு முரட்டரிசி சமைத்தாலென்ன நாணயமான அரிசி சமைத்தாலென்ன எதையாகிலும் சமை" என்று வேடிக்கையாய்க் கூறினார். ஆயினும் அதை யறிந்த சதாங்கை காளிங்கராயர் மனஸ்தாபமடைந்து "நான் என் பூமியில் நஞ்செய் தானியம் பயிர் செய்த பின்பு வந்து உன் புத்திரியை மணம் செய்துகொள்வேன்" என்று கூறிவிட்டு உடனே தன் பரிவாரத்தோடு அங்கிருந்து போய்விட்டார்.

அவர் மனச் சோர்வோடு தன் தலை நகருக்கு வந்ததும் தன் உபாசனை மூர்த்தியாகிய சுப்பிரமணியக் கடவுளைச் சிந்தித்து "ஓ ஆறுமுகக் கடவுளாகிய என் ஆத்ம நாதனே! அடியேனுக்கு நஞ்சைப் பூமி கிடைக்குமாறு அருள் பாலித்தல் வேண்டும்" என்று திரிகரணசுத்தியாய்ப் பிரார்த்தித்து குமரக் கடவுள் மேல் வைத்த சிந்தனையோடு துயிலமர்ந்தார். அவர் தமது பிரார்த்தனை நிறைவேறுமட்டும் விரதம் இருக்கத் தீர்மானித்து தீட்சை வளர்த்துக் கொண்டார்.

ஒருநாள் அவர் நித்திரையிலிருக்கும்போது வெள்ளிபங்கனாகிய சுப்பிரமணியப் பெருமான் ஒரு வயது முதிர்ந்த சந்நியாசிபோல் அவர்கனவிற் தோன்றி "நீ யேன் துயரத்தோடிருக்கிறாய்? மனவாட்ட மடையவேண்டாம். பவானி நதியில் ஒரு அணை கட்டி ஒரு கால்வாய் தோண்டு. உன் அபீஷ்டம் நிறைவேறும்" என்றனர்.

சதாங்கைக் காளிங்கராயர் "ஓ சுவாமி. எனக்குத் தாங்கள் கூறுவது கலவரமாயிருக்கிறது. ஆற்றின் எந்த விடத்தில் அணை கட்டுவதென்றும், எத்திக்கை நோக்கிக் கால்வாய்த் தோண்டுவதென்றும் எனக்கு விளங்கவில்லை." என்றார்.

அப்பெரியார் "பவானியாற்றில் அடியிலிருந்து ஒரு மயில் ஒரு சர்ப்பத்தைத் தூக்கிச் சென்றிருக்கிறது. அந்த அடையாளங்கள் அங்கு புலப்படுகின்றன. நீ அப்பாதையை வழியாகக் கொண்டு கால்வாய் தோண்டிச் செல்" என்று அருளிச் செய்து மறைந்துபோனார்.

சதாங்கை காளிங்கராயர் நித்திரைவிட்டெழுந்தவுடனே ஆற்றில் போய் பார்வையிடக் கடவுள் சொப்பனத்தில் சாதித்தபடி ஒரு மயிலால் தூக்கப்பட்ட ஒரு பாம்பு செல்லும் பாதையைக் கண்டு மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து தம் ஆன்மார்த்தக் கடவுளாகிய ஆறுமுகப் பெருமானை அன்போடு துதித்து வாழ்த்தினார்.

அதன்மேல் அவர் உராச்சிக்குன்றுகளிலிருந்து கற்கள் கொண்டுவந்து ஆற்றில் அந்த விடத்தில் அணைகட்டி அங்கிருந்து கால்வாய் தோண்டினார். ஆனால் வெள்ளை வேட்டுப்பாளையக்காரர் அது தனக்குச் சொந்தமான பூமி யென்று ஆக்ஷேபணை செய்தார். ஆயினும் அந்த ஆக்ஷேபணை விலக்கப்பட்டு அணைக்கட்டு கட்டப்பட்டு, கொடுமுடி வரையில் ஒரு வாய்க்காலும் தோண்டப்பட்டது. அந்த வேலைகளுக்குப் பெருந் தொகையான பணம் செலவு செய்யப்பட்டது. அக்கால்வாய்க்குச் சர்ப்பம் வழிகாட்டியாக விருந்தபடியால் அந்த அணைக்கட்டுக்குக் காளிங்கன் அணைக்கட்டு என்றும் கால்வாய்க்குக் காளிங்கன் கால்வாய் என்றும் பெயர்கள் வைக்கப்பட்டன.

இக்கால்வாயின் பயனாகப் பூந்துறையில் இருந்த புஞ்செய் நிலங்களெல்லாம் நஞ்செய் நிலங்களாக மாறிவிட்டன. அக்கால்வாயை வெட்டியவர் சதாந்தை யாதலால் அவர் நாமத்திற்குக் காளிங்கன் என்ற அடைமொழி சேர்க்கப்பட்டதோடு, அவர் பூமியில் விளைந்த நெல்லுக்கும் காளிங்கன் நெல் என்ற பெயரிடப்பட்டது. இப்போது அவர் தமது மைத்துனரிடம் கூறிவந்த பிரதிக்ஞை நிறைவேறிவிட்டபடியால் அவர் மறுபடி கரூருக்குச் சென்று தமது வாக்குத் தத்தப்படி தமது புத்திரனுக்குத் தம் மைத்துனர் புதல்வியை மணம் செய்வித்துக்கொண்டார். அதன் பிறகு அவர் தமது நாட்டிற்குத் திரும்பிவந்து சமாதானத்தோடும் பூரண க்ஷேமத்தோடும் தமது குடும்ப சமேதராய் வசித்துக்கொண்டிருந்தார். அதுமுதல் மயில் அவருடைய குடும்பத்தின் அடையாளக் குறியாய்விட்டது.

சதாந்தைக் காளிங்கராயர் ஒருநாள் ஆயாசத்தால் நித்திரை போய்விட்டார். அச்சமயம் ஒரு க்ஷவரகன் வந்து அவர் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்போது அவர் உணராத விதமாய்ச் சௌளம் செய்துச் சென்றான். அவர் விழித்தெழுந்ததும், அந்த நாவிதன் விஷயத்தில் மிக்க பிரியம் கொண்டு அவனை யழைத்து உனக்கென்ன வேண்டும் என்று வினவினார். அந்த நாவிதன் "பிரபுவே! என் பெயர் என்றுமிருக்குமாறு ஏதேனும் ஒன்று செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான். காளிங்கராயர் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.

அந்த வாக்குத் தத்தத்தை நிறைவேற்றுவதற்காகச் சதாந்தைக் காளிங்கராயர் காளிங்கன் அணைக்கட்டுக்கருகில் ஒரு கிராமத்தை ஸ்தாபித்து அதற்கு நாவிதப்பாளையம் என்று பெயரிட்டு அதை அந்த நாவிதனுக்கே சர்வமானியமாக விட்டுவிட்டார். காளிங்கன் அணைக்கட்டும் கால்வாயும் கலியாப்தம் 2,000 வருடத்தில் அமைக்கப்பட்டவை யென்று கூறப்படுகிறது. அந்த அணைக்கட்டினருகில் காளிங்கராயரின் கற்சிலையும், சர்ப்பத்தின் சிலையும் வைக்கப்பட்டு அவற்றிற்குப் பூசையும் திருவிழாக்களும் அவருடைய சந்ததியார்களாலும் மற்ற விவசாயிகளாலும் நடத்தப்பட்டு வந்தன.

அந்தப் பிரதேசங்களில் காளிங்கராயரின் நாமம் பிரசித்தி பெற்று அவர் நாளுக்கு நாள் செல்வத்திலும் வல்லமையிலும் விர்த்தியடையலாயினார். ஆனால் கொங்கநாட்டின் மற்ற அறுபத்தி மூன்று பட்டாகாரர்களும் அவர்மேல் பொறாமை கொண்டார்கள். அதனால் அவர்கள், இவருக்கு காவலிக்க

நாடு மட்டும் அளிக்கப்பட்டதேயன்றி பூந்துறை பாகம் அளிக்கப்படவில்லையென்ற காரணத்தைச் சாக்காகக் கொண்டு, அவருக்குச் சம மரியாதையும் சம ஆசனமும் அளிக்க மறுத்தார்கள். இதனால் அவர் வெறுப்படைந்து ஆனைமலைக் குன்றுகளுக்கருகிலிருந்த காவளிக்க நாடாகிய தமதிடத்திற்குச் சென்று தமது குடும்பம் கால் நடைகளோடு அங்கேயே வசிக்கத் தொடங்கினர்.

இருபத்துமூன்றுவது பாளையக்காரர் காலம் வரையில் பூந்துறை காளிங்கருடைய குடும்பத்திற்குச் சொந்தமாக விருந்ததென்று கூறினோம். அக்காலத்தில் மைசூர் இராஜாங்கம் இப்பிரதேசங்களின் மேல் ஆதிக்கம் செலுத்திவந்ததால் அவற்றிற்கு ரொக்க கிஸ்தி விதிக்கப்பட்டிருந்தது. மைசூரிலிருந்து ஒரு சைனியம் சத்தியமங்கலத்தில் வந்து பாளையமிறங்கி, அதன் போஷணைக்காகப் பாளையக்காரரை வருத்தத் தொடங்கியது. அவர்கள் கேட்டபடி நடக்காதபடியால் பவானியாற்றுக்கருகிலுள்ள பூமிகளை யெல்லாம் மைசூர் இராஜாங்கம் கைப்பற்றிக்கொண்டது.

பாளையக்காரர் தாம் இழந்த கௌரவத்தை மீண்டும் பெறும் பொருட்டாக இராயர் சமஸ்தானத்திற்குச் சென்று, அங்கு பனிரண்டு வருடங்கள் காத்திருந்தும் அவர் இராயரைக் காண முடியவில்லை. இதனால் பாளையக்காரர் மிக்க மனமுடைந்து பெனுகொண்டா பட்டணத்திற்குச் செல்லும் பாதையின் தென் பாரிசத்திலுள்ள ஒரு காளி கோயிலுக்குச் சென்று "மகா சக்தியாகிய பரதேவதையே! என்னை இத்துன்பத்தினின்றும் காப்பாற்றியருள வேண்டும்" என்று பிரார்த்தித்து அப்படியே நித்திரைபோய்விட்டார்.

அத்தேவதை அவர் கனவில் தோன்றி, "இராயருடையபுத்திரன் பனிரண்டு வருடங்களாகப் பைத்தியம் பிடித்தவனாக விருக்கிறான். நீ என்சந்நிதானத்திலிருந்து கொஞ்சம் விபூதியை யெடுத்துக்கொண்டுபோய் அந்த இராசகுமாரன்மேல் தூவு, உடனே அவனுடைய பைத்தியம் நீங்கிவிடும். அதன்மேல் இராயர் உன்னை வரவழைத்து உன் விருப்பத்தைப் பூர்த்திசெய்வார்" என்று கூறினாள். பாளையக்காரர் அம்மன் கூறியபடியே செய்தார். அம்மனுடைய விபூதி மேலே பட்டதும் இராஜகுமாரனுடைய பைத்தியம் நீங்கி அவன் முன்போல் பூரணசுகமடைந்து விட்டான்.

அக்காலத்தில் பெனுகொண்டா விஜயநகரை அரசாண்டு கொண்டிருந்த தேவராயர் என்பவர் தன் அருமைமைந்தனது பைத்தியம் நீங்கியதைக் கண்டதும் மிக்கவியப்பும் சந்தோஷமு மடைந்து தன் புத்திரனை சுகப்படுத்திய ஆளை வரவழைத்து, அவருக்கு தலைமுறை தலைமுறைக்கு இராயர் பட்டமளித்து காவலிக்க நாட்டுக்கு அவரைத் தலைவராக்கி, அவர் அந்த நாட்டையாள்வதற்குறிய சந்நதுகளும் அரசருக்குரிய பிருதுகளும் அளித்தார்.

அதன்பிறகு காளிங்கராயர் தாம்தம் குடும்பத்தையும் கால்நடைகளையும் விட்டு வந்திருந்த ஆனைமலைக்குச் சென்று அங்கிருந்த காடுகளை யழித்துச் சீர்திருத்தி அங்கு ஊத்துக்குளி என்ற கிராமத்தை நிர்மாணித்தார். அந்த இடத்தில் ஆயர்களால் கால் நடைகளுக்காக தோண்டப்பட்ட நீர்க்குழிகளும், ஊற்றுகளும் இருந்த படியால் அதற்கு ஊத்துக்குளி என்று பெயரிடப்பட்

டது. அந்த இடத்தில் அவர்தமது அரண்மனையைக் கட்டிக்கொண்டு ஊத்துக்குளிப்பாளையக்காரராக அப்பிரதேசத்தை யாண்டுவந்தார்.

ஊத்துக்குளிப்பாளையம் என்ற பெயர் வந்ததற்கு வேறுவிதமான சரித்திரமும் கூறப்பட்டிருக்கிறது.

அதாவது, சதாக்கைக் காளிங்கராயரால் வெள்ளை வெட்டுப் பாளையக்காரர் தமது நாட்டினின்றும் துரத்தப்பட்டபின், அப்பாளையக்காரர் தமது பரிவாரத்தோடு ஆனைமலைக் குன்றுகளுக்குச் சென்று வசித்துக்கொண்டிருந்தார். அவருடைய சந்ததியார் அருகிலிருந்து நாட்டாரை யிம்சிக்கத் தொடங்கினார்கள். அப்போது பெனுகொண்டாப் பட்டணத்தை ஆண்டு கொண்டிருந்த தேவராயர் வெள்ளை வெட்டோரானை யடக்கி யாள்பவன் யாரென்று விசாரித்தார். அப்போது, காளிங்கராயருடைய இளைய குமாரன் நஞ்சைய காளிங்கராயர் தேவராயருடைய கொலுவுக்குச் சென்று அவரைக் கண்டார். இராயர் " நீ ஆனைமலைப்பக்கம் சென்று வெள்ளை வெட்டோரானுடைய சந்ததிகளையடக்கி அவர்கள் வசத்திலிருக்கும் இடங்களை யெல்லாம் கைப்பற்றிக்கொண்டு காடுகளை யெல்லா மழித்துக் கிராமங்களாக்கி அந்த விடத்தில் பாளையக்காரராய் ஆண்டிரு " என்றார்.

அவ்வாறே நஞ்சைய காளிங்கராயர் அவர்களை யெல்லாம் துரத்திவிட்டுக் காடுகளை யழித்து ஊத்துக்குளி கிராமத்தை யுண்டாக்கி அதன் பாளையக்காரராக ஆண்டு வந்தார் என்பதே.

ஊத்துக்குளியின் முதல் பாளையக்காரராகிய காளிங்கராயர் தென்னாட்டிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுக்கெல்லாம் யாத்திரை செய்து அனேக தான தருமங்களைச் செய்தார். அவர் ஒரு கோயிலைக் கட்டி யதில் அகத்தூர் அம்மன் என்ற தேவதையைப் பிரதிஷ்டை செய்தார். தன் பாளையத்தைச் சேர்ந்த பூமிகளை யெல்லாம் மீட்டுக்கொண்டு விவசாயத்திற்காகக் கிணறுகளையும் கால்வாய்களையும் தோண்டச் செய்து தன் நாட்டைப் புகழ்ச்சியோடும் க்ஷேமத்தோடும் பரிபாலித்து வந்தார். அக்காலத்தில் அவர் நாடு கிழக்கு மேற்காக நாற்பது மைலும், வடக்கு தெற்காக இருபது மைலும் விஸ்தீரணமுடையதாக விருந்தது. அதன் எல்லைகள் வடக்கில் எல்லைப்பள்ளமும், கிழக்கில் பொன் குலுக்கி நாட்டைச் சேர்ந்த தலைக்காரைப் பள்ளமும், தெற்கில் செல்லூர்க் கானுடு பாலாறும், மேற்கில் கம்பலத்துறை மணலியாறுமாக விருந்தன.

அப்பாரம்பரையைச் சேர்ந்த இரண்டாவது பாளையக்காரர் முதல் எட்டாவது பாளையக்காரர் வரையில் ஏதேனும் விசேஷ சங்கதி யாவது அல்லது கொஞ்சமாவது ஒன்றும் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் இராயர் ஆளுகையின் கீழ் சமாதானமாய் ஆண்டு வந்தார்கள்.

ஒன்பதாவது பாளையக்காரராகிய நஞ்சைய காளிங்கராயர் காலத்தில் பாண்டியன் நாட்டை விஸ்வநாத நாயக்கர் அரசாண்டு வந்தார். எல்லாப் பாளையக்காரர்களும் அவர் கொலுவுக்குச் சென்று அவருக்குக் கப்பம் செலுத்தி வந்தார்கள். ஆனால் ஐந்து இராஜாக்கள் திருநெல்வேலியில்

கோட்டைகளைக் கட்டிக்கொண்டு அவர் அதிகாரத்தை அலட்சியம் செய்தார்கள். விஸ்வநாத நாயக்கரின் கட்டளையின் மேல் நஞ்சைய காளிங்கராயர் அவர்கள்மேல் படையெடுத்துச் சென்று அந்த ஐந்து இராஜாக்களின் கோட்டைகளையும் கைப்பற்றிக்கொண்டு, தன் ஜெயத்திற்கு அறிகுறியாக அவர்களுடைய சிரங்களைக் கொண்டுவந்து நாயக்கர் முன் வைத்தார்.

நாயக்கர் அவருடைய வல்லமைக்கும் தைரியத்திற்கும் மிக்க மனமுவந்து அவரைப் பராக்கிரம நஞ்சைய காளிங்கராயர் என்று கூறி, ஐம்பத்தோராவது கொத்தளத்திற்கு அவரைச் சேனாதிபதியாக அமர்த்தி அப்பாளையத்தை யவருக்குச் ஜாகிராக விட்டுவிட்டார். பதினெட்டாவது பாளையக்காரர் காலம் வரையில் இது இப்படியே நடந்துகொண்டிருந்தது.

பத்தொன்பதாவது முதல் இருபத்து மூன்றாவது பாளையக்காரர் வரையில், மதுரை மைசூர் இந்தஇரண்டு சமஸ்தானங்களின் அதிகாரங்களுக்குட்பட்டிருந்த கணவாயின் கீழிருந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டியது கடமையாக விருந்தது. அந்நாடு முழுமையும் மைசூர் சமஸ்தானத்தின் ஆளுகைக்குட்படுத்தப் பட்டபொழுது, இருபத்து மூன்றாவது பாளையக்காரராகிய நஞ்சைய காளிங்கராயர் அப்போது மைசூர் சமஸ்தானாதிபதியா யிருந்த இம்முடி இராஜ உடையாரைப் போய்தரிசித்தார்.

அச்சமயம் குடகு இராஜ்ஜியம் மைசூர் சமஸ்தானத்திற்குக் கீழ்ப்படியாமலிருந்தபடியால், மைசூர் அரசரின் கட்டளைப்படி காளிங்கராயர் மைசூர் இராஜ்யத்தின் சேனைக்குப் படைத்தலைவராகச் சென்று குடகு நாட்டாரைக் கீழ்ப்படியும்படி செய்தார். மைசூர் அரசராகிய இராஜஉடையார் மிக்க மகிழ்ச்சியடைந்து, காளிங்கராயருக்குப் பொன்முலாம் பூசப்பட்ட பல்லக்கும் இன்னும் பல பரிசுகளுமளித்து, அவர் பாளையத்தின் ஒன்பது கிராமங்களுக்கு 750-பணம் பெயிஷ்கஷ் நியமித்தார். அப்போது பாளையக்காரர்கள் தங்களிடம் 5,000-காலாட்களையும், 5,000-குதிரை வீரர்களையும், ஒரு கடகம் யானைகளையும் வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆனை மலையிலிருந்துகொண்டு யானைகளைப்பிடித்து அரசர் அரண்மனைக்கு அனுப்பிக் கொண்டிருந்ததோடு ஆனைமலைக்கும் மார்ச்சி நாய்க்கன் பாளையத்திற்கும் பாது காப்பாயிருந்து வந்தார்கள். இந்த வேலைகளுக்காகத் தங்கள் நாட்டிற்குள் செல்லும் சரக்குகளுக்கு வரிவிதிக்கப் பாளையக்காரர்கள் அனுமதி பெற்றார்கள்.

சமஸ்தானத்தில் உண்டான மாறுதல்களால் பாளையக்காரர்களுக்கு கஷ்டங்கள் உண்டாயின. இருபத்தாறாவது பாளையக்காரர் தமது பாதுகாப்பில் பாதியை யிழக்க நேர்ந்தது. அதோடு அவர் கள்ளிக்கோட்டை இராஜனோடு தோல்வி யடைந்தார். ஆயினும் இருபத்தெட்டாவது பாளையக்காரர் வரையில் நாட்டிற்குள் வரும் சரக்குகளுக்கு வரிவிதிப்பது நடந்துகொண்டேதானிருந்தது.

திப்புசுல்தான் காலத்தில் ஜனங்களைக் கசக்குவதும் வருவதும் சாதாரணமாய் விட்டிருந்ததென்பது பகிரங்கமான இரகசியமே. இருபத்தொன்பதாவது பாளையக்காரர் கலி 4891-ல் விரோதிக்கிருது வருடம் மாசிமீ 4உ

ஆளுகை செலுத்தத் தொடங்கினர். அவர் திப்பு சுல்தானுலும் அவருடைய சைனியங்களாலும் அதிகமாக இம்சிக்கப் பட்டார். அதனல் அவர் தமது குடும்பத்தைப் பம்பாயிக்கு அனுப்பிவிட்டு, ஆவலோடு கிழக்கிந்திய சங்கத்தாரின் (ஈஸ்ட் இந்தியா கம்பெனி) ஆளுகையை யெதிர்பார்த்துக் கொண்டு தாம்மட்டும் தனியே ஊத்துக்குளியி லிருந்து வந்தார்.

சித்தார்த்தி வருடம் பாலகாட்டுக் கோட்டையின் படைத் தலைவராகிய மேஜர்ஸமூஷம் ஆலிஸாஹிப்பும், பம்பாய் பௌஸிதார்களின் தலைவராகிய லித்கிஒட்டு ஸாஹிப்துரையும், ஜெனரல் ஒட்லே ஸாஹிப்பும், இவர் பிரிடிஷ் இராஜாங்கத்தினிடத்தில் வைத்திருந்த இராஜ பக்திக்காக இவரிடம் அன்பு வைத்திருந்தார்கள். அதனல் அப்பிரதேச கிழக்கிந்திய சங்கத்தாரின் ஆளுகைக்கீழ் வந்ததும் பத்தில் ஏழு பங்கு வரி செலுத்தவேண்டும் என்ற நிபந்தனைமேல் இவருக்கு ஊத்துக்குளி பாளையக்காராகச் சநது அளிக்கப்பட்டது. அதுமுதல் அப்பாளையக்காரர்கள் சமாதானத்தோடு அப் பாளையப் பட்டை அனுபவித்து வந்தார்கள்.

முப்பத்தோராவது பாளையக்காரராகிய முத்துகிருஷ்ண காளிங்கராயர் 1832-வது வருடம் ஜனித்தார். அவர் தமது பூஸ்திதிகளை விர்த்தி செய்வதில் நோக்கமுடையவராக விருந்தார். அவர் ஆனைமலையிலும் மார்ச்சி நாயக்கன் பாளையத்திலும் விஸ்தாரமான பூமிகளை வாங்கினர். அதோடு தமது மாளிகையையும் விசாலப்படுத்தினர். அவர் சிறு வயதிலிருந்து அம்பாரம் பாளையத்தில் ஒரு பெரிய மாடி வீட்டைக் கட்டி அதைக் களைத்துவரும் பிரயாணிகளுக்குச் சத்திரமாக விட்டுவிட்டார்.

அந்தப் பாளையக்காரர் 1874-ம் வருடம் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி தமது நாற்பத்திரண்டாவது வயதில் விண்ணுலகடைந்தார். அவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். மூத்தவராகிய சிவசுப்பிரமணிய திருமூர்த்தி காளிங்கராயர் 1852ஆம் பிறந்தவர். அவர் வீட்டிலேயே உபாத்தியாயர்களிடம் கொஞ்சம் ஆங்கிலம் கற்றுக்கொண்டார். ஆனல் தாய்ப் பாஷையாகிய தமிழில் நல்ல தேர்ச்சியடைந்திருந்தார். அவர் 1874-ம் வருடம் ஆளுகைக்கு வந்தார். ஆனல் சொல்பகாலமாகிய ஏழு வருடங்களே யிருந்தார். ஏனெனில் பாலியத்தில் 1881-ம் வருடம் காலகதியடைந்தார். அவர் தமது தந்தை கொச்சி இராஜ்ஜியத்திலிருந்து தமது பூமியோடு சேர்த்த பூஸ்திதியில் இன்னெரு கிராமத்தையும் சேர்த்தார். அதுமட்டுமல்ல; அவர் தமது இலாகாவிலுள்ள தேவஸ்தான நடவடிக்கைகளில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார். அவர்மத விஷயத்திலும் தத்துவ விசாரணையிலும் மிக்க விருப்பமுடையவர். அவர் எப்போதும் கற்றறிந்த பண்டிதர்களையும் வேதாந்த விற்பன்னர்களையும் தம்மிடம் சேர்த்து வைத்துக்கொண்டு மேலான ஆன்மார்த்த உண்மைகளை யாராய்ச்சி செய்துகொண்டிருந்தார். அவர் வேதாந்த விசாரணை செய்வதில் சதா சிரத்தையுடையவராக விருந்ததால் அவருக்கு "வேதாந்த துரை" என்று நாமதேயம் சூட்டப்பட்டது. (அத்தகைய உத்தமர் அகால மரணமடைந்தது நம் பாரதநாடு விசனிக்கத்தக்க

விஷயமே. ஏனெனில் செல்வ நிலையிலிருப்போர் அவ்வாறு நடந்துகொள்வது மிக்க அருமை.) அவருக்குச் சந்ததியில்லை.

இப்போதிருக்கும் ஊத்துக்குளி பாளையக்காரர் வமிசாவளியில் முப்பத்துமூன்றாவது பாளையக்காரராவர். இவர் 1864௵ ஜனவரி௴ 24௳ ஜனனமானார். தமது குழந்தைப் பருவத்தில் வைசூரியால் தாக்கப்பட்டு மிக்க கஷ்டத்தோடு தெய்வ சகாயத்தால் மயிரிழை தப்பினார் எனலாம்.

அவர் சிறு வயதில் பல உபாத்தியாயர்களிடம் கல்வி கற்க விடப்பட்டார். ஆனால் கல்வியில் அவர் கொஞ்சங்கூடக் கவனத்தைச் செலுத்தாமல், என்னேரமும் விளையாட்டிலும் பந்தாட்டம் முதலியவைகளிலுமே நாட்டமுடையவராக விருந்தார். அவர் குதிரைகள் மேலும் நாய்கள் மேலும் மிக்க பிரியமுடையவராய்க் கூட்டமாய் அவைகளை வைத்து வளர்த்து வந்தார். அவர் தமது காலத்தை வேட்டையாடுவதிலும், மல் யுத்தம் முதலிய கசரத் வேலைகளிலும் கழித்துவந்தார். அதோடு அவர் குதிரைச் சவாரி செய்வதிலும் சங்கீதத்திலும் மிக்க ஆர்வமுடையவர். அவர் தாம் மட்டும் சங்கீதம் கற்றுக்கொண்டதோடு மற்ற இடங்களிலுள்ள சங்கீதத்தில் தேர்ந்த வித்துவான்களை வரவழைத்து அவர்களுக்குப் பரிசளித்து உற்சாகமூட்டினார்.

இவருடைய மூத்த சகோதரர் சந்ததியின்றித் தமது இருபத்திரண்டாவது வயதில் காலம் சென்றார். அதனால் இவர் தமது பதினெட்டாவது வயதில் (1881௵) பாளையக்காரரானார். அப்போது தமது நிலைமையையும் பொறுப்பையும் உணரலானார். அவர் உடனே காலகரணம் செய்யாமல், ஒரு காலத்தில் உபாத்தியாயர் தொழிலிலிருந்தவரும் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தவருமான மிஸ்டர் ரைட் (Mr. Wright) என்ற ஐரோப்பியரிடம் சுறுசுறுப்பாய்க் கல்வி கற்கத் தொடங்கினார். அந்த துரையோடும் அவர் குடும்பத்தோடும் சதா நெருங்கிப் பழகியதால் ஆங்கில பாஷையை நன்றாகப் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டதோடு, ஆங்கிலர் இந்தியர் இவர்களில் உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குகளிலெல்லாம் நன்றாகப் பழகிக்கொண்டார். அவர் அநேகம் ஐரோப்பியப் பெரிய மனிதர்களிடமும் இந்தியப் பெரிய மனிதரிடமும் அறிமுகமுடையவராகி அவர்கள் கூட்டங்களில் தாராளமாய்ப் புழங்கிக்கொண்டிருந்தார். புராதன மாதிரி அமைக்கப்பட்டிருந்த தமது முன்னோரின் அரண்மனையை அதிகமாக விசாலப்படுத்தினார். நன்றாக அமைக்கப்பட்ட ஒரு உத்தியான வனத்தை யுண்டாக்கியதோடு ஓர் சிறிய மிருகாலயத்தை (பலவித மிருகங்கள் வைத்து வளர்க்கப்படும் இடம்) ஸ்தாபித்து வைத்தார். இன்னும் புதிதாய் ஒரு பங்களாவைக் கட்டி, அதனருகில் விளையாடுவதற்குரிய இடவசதிகளையும், மேஜைமேல் பந்து விளையாடும் (பில்லியர்ட்) ஒரு அறையையும் அமைத்தார். அந்த பங்களாவுக்கு "பொன் தோட்டம் (Golden Grove) என்று பெயரிட்டார்.

இந்த விர்த்திகளைச் செய்ததில், தம்மிடத்திலிருந்த உத்தியோகஸ்தர்களில் ஒருவராகிய திருவநந்தபுரம் மாணாப்பிள்ளை யென்பவர் அவருக்குமிக்க உதவி செய்தார். புதிதாய்ச் சேர்க்கப்பட்ட கட்டிடங்கள் ஊத்துக்குளிக்கு

வரும் நல்ல அந்தஸ்துடைய சிநேகர்கள், விருந்தினர்கள் முதலியவர்களின் வசதிக் கென்றே அமைக்கப்பட்டன. குடிகளின் அன்பார்ந்த பிரார்த்தனைப் படிக்கும் விருப்பத்தின்படிக்கும் 1894௵ ஏப்ரல்௴ 12௳ பாளையக்காரருக்கு தமது காணியாட்சிக்கு உறியவராக ஒரு புத்திரர் பிறந்தார். அச்சம்பவம் அவருடைய நடக்கையில் ஒரு மாறுதலை யுண்டாக்கிவிட்டது.

அதன் பிறகு அவர் தமது பாளையப்பட்டு விஷயங்களைத் தாமே நேரில் பார்க்க சிரத்தை யெடுத்துக்கொண்டு, தம் காரியாலயத்தின் வேலைகளை கவனிக்கத் திட்டமாய்க் காலங்களை யேற்படுத்திக் கொண்டதோடு, கணக்கு வழக்குகள் யாவற்றையும் ஒழுங்காகவும் திட்டமாகவும் நடைபெறச்செய்யவும், எல்லா விஷயங்களிலும் ஒழுங்காக நடக்கவும் அமைப்பதில் நேரே சிரத்தை யெடுத்துக் கொண்டு காரியங்களை நடத்தத் தொடங்கினர். தமது புத்தி நுட்பத்தாலும் சாதுரியத்தாலும் தமது பூமியில் இருபதினாயிரம் ரூபாய் அதிக வருமானம் காட்டினர்.

1894௵ சமத்தூர் பாளையக்காரர் முப்பதினாயிரம் ரூபாய் வரையில் கடன் பட்டுவிட்டார். அவர் ஊற்றுக்குளி பாளையக்காரின் நெருங்கிய பந்து ; ஆகையால் அப்பாளையக்காரர் தமது பூமியின் நிர்வாகம் முழுமையும் ஊத்துக்குளி பாளையக்காரரிடம் ஒப்பித்து விட்டதோடு, தமது மைனர் குமாரனுடைய பாதுகாப்பையும் அவரிடமே ஒப்பித்து விட்டார். அவர் தமது குடும்பத்தோடு ஊத்துக்குளிக்கே வந்து அந்த பாளையக்காரர் ஆதரணையிலேயே யிருக்கத் தொடங்கினர். அதோடு தமது மைனர் குமாரன் ஊத்துக்குளி பாளையக்காரரின் புத்திரியை மணம்புரிய வேண்டுமென்ற தமது விருப்பத்தை யவர் வெளியிட்டிருந்தார்.

விஷயங்கள் இத்தகைய நிலைமையிலிருக்கும்போது 1895௵ சமத்தூர் பாளையக்காரர் காலமாய்விட்டார். அப்போது கோயம்பத்தூர் ஜில்லாவின் கலெக்டராகவிருந்த மிஸ்டர் பிராட்லி (Mr. Bradley) என்பவர், காலம் சென்ற சமத்தூர் கொட்டம்பட்டி பாளையக்காரருடைய பூஸ்திதியின் காரிய நிர்வாகத்தை ஊத்துக்குளி பாளையக்காரரே பார்த்துவரலாகும் என்று துரைத்தனத்தாருக்குச் சிபார்சு செய்தார். துரைத்தனத்தார் அதை யங்கீகரித்துக்கொண்டார்கள். அதன்படி கடன்பட்டிருக்கும் சமத்தூர் பாளையப்பட்டு ஊத்துக்குளி பாளையக்காரர் பொறுப்பில் விடப்பட்டது.

ஊத்துக்குளிப் பாளையக்காரர் தமது புத்தி நுட்பமான காரிய நிர்வாகத்தால், சமத்தூர் பூஸ்திதியின் வருமானத்தில் 5,000 ரூபாய் அதிகமாக்கி எட்டு வருடங்களில் அதைச் சேர்ந்த கடன்களை யெல்லாம் தீர்த்துவிட்டு, நீர்ப் பாய்ச்சல் வேலைகளைப் பழுதுபார்ப்பதற்காக 3,000 ரூபாயும், சமத்தூர் பாளையக்காரரின் அரண்மனையைச் சீர்ப்படுத்தி விர்த்தி செய்வதற்காக 5,000 ரூபாயும், மைனர் பாளையக்காரர் 1901௵ நவம்பர்௴ 17௳ தன் புத்திரியை மணம்புரிவதற்காக 8,000 ரூபாயும் செலவு செய்தபின் மிச்சமாக அதிகப் பணம் வைத்தார். 1920௵ சமத்தூர் பாளையம் அதன் வாரிசுதாரனிடம் ஒப்பிவிக்கப்பட்டது.

மைவாடி ஜமீன்தார் காலமானபின் அச்சமீன் ஜில்லா ஜட்ஜின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. அவருடைய கோரிக்கையின்மேல் 1898௵ பிப்ரவரி௴ 4௳ ஊத்துக்குளிப் பாளையக்காரர் அதன் நிர்வாகத்தை யொப்புக்கொண்டார். அவர் சில காலம் ஜில்லா சபையிலும் (District Board) தாலுகா சபையிலும் வேலை செய்தார். அவைகளின் காரியங்களில் அவர் மிக்க சிரத்தை யெடுத்துக் கொண்டார். கடந்த ஐந்து வருடங்களாக கோயம்பத்தூரிலிருக்கும் விவசாயக் கல்லூரியிலும், ஆராய்ச்சிச்சாலையில் தாமே சென்று கவனித்து வந்தார். அவர் தமது பூஸ்திதியில் காட்டிய காரிய நிர்வாகத் தன்மையாலும், பொது விஷயங்களில் காட்டிய பிரியத்தாலும் சென்னை துரைத்தனத்தார் இரண்டு சந்தர்ப்பங்களில் அவருக்குக் கௌரவப் பத்திரங்களை யளித்திருக்கிறார்கள்.

அவர் பொதுநலத்திற்காக கொடுத்த நன்கொடைகளிலும் செய்த தருமங்களிலும் சில பின்வருமாறு :—

1910-ம் வருடம் கோயம்பத்தூரில் ஒரு புது வைத்தியசாலை கட்டுவதற்காக 500 ரூபாய்; கோயம்பத்தூர் கால்நடை வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை செய்வதற்கு ஒரு அறை யமைப்பதற்கு 1,000 ரூபாய்; 7-வது எட்வர்ட் சக்கிரவர்த்தியின் ஞாபகத்தின் நிதிக்காக 300 ரூபாய்; கோயம்பத்தூரிலுள்ள கிருஸ்தவ வாலிபசங்கத்தாருக்குக் கட்டிடம் அமைப்பதற்கு 250 ரூபாய்; கடந்த இரண்டு மூன்று வருடங்களாக சென்னையிலுள்ள கால்நடை வைத்தியக் கல்லூரியில் பரீட்சையில் தேரும் மாணவர்களில் ஒருவர்க்குத் தம் பெயரால் தங்கப்பதக்கமும், இன்னொருவர்க்குத் தமது மூத்த குமாரர் பெயரால் வெள்ளிப் பதக்கமும் பரிசாக அளிப்பதற்கு வேண்டிய தொகை கொடுத்து வருகிறார்.

பாஷாபி விர்த்தியையும் கல்வி யபி விர்த்தியையும் ஆதரிக்க வேண்டுமென்ற விருப்பமுடையவராதலின், தமது பாளையத்திலுள்ள சிறுவர்களின் நன்மைக்காக 1912-ம் ஆண்டு ஊத்துக்குளியில் ஒரு ஆரம்பப் பாடசாலையை ஸ்தாபித்து அப் பாடசாலையின் கட்டிடச் செலவுக்காக 3,000-ரூபாய் அளித்து பாடசாலை நடைபெறுவதற்காக மாதம் 20-ரூபாயும் அளித்து வந்தார். அதே வருடம் அறுநூறு ரூபாய் செலவில் கோயம்பத்தூர் நகரபரிபாலன சங்கத்திற்கு (முனிஸிபாலிடி) உள் அவயங்களைப் படம் பிடிக்கும் ஒரு எந்திரத்தை (X-Ray Apparatus) ப்பரிசாக வாங்கி யளித்தார். 1913-௵ கோயம்பத்தூர் கல்லூரி நிதிக்கு 1,000-ரூபாயளித்தார். கோயம்பத்தூரில் ஒரு உத்தியான வனம் (Public Park) ஏற்படுத்துவதற்காகத் தமது கைப்பணத்திலிருந்து 1,000-ரூபாயும், தமது ஜாதியாரிட மிருந்து 3,000-ரூபாய் சேகரம் செய்தும் அளித்தார்.

பாளையக்காரர் பெருமையின்றிச் சாமானியமாய் நடந்து கொள்பவர். தமது ஜாதியாருக்குள் அவர் கல்விமானாகவும் அறிவாளி யாகவும் அறியப்பட்டவர். அவர் யாவரிடமும் அன்புடையவர்; யாவரும் எளிதில் காணக்கூடியவர். அவர் எப்போதும் தமது குடிகளிடத்தில் அநுதாபம் காட்டி, அவர்களுக்குத் தம்மாலானவரையில் உதவி புரிபவர். ஏழைகளையும் உதவிவேண்டிய

வர்களையும் ஆதரிப்பவர். 1910௵ ஊத்துக்குளியிலும் அதன் சுற்றுப்பக்கங்களிலும் கொள்ளை நோய் (பிளேக்) கிளம்பியபோது, ஜமீன்தார் தன் குடிகளுக்குப் பணமும், தானியமும், வீடு கட்டிக்கொள்ளும் சாமான்களும் உதவினார். இவைகளும் இன்னும் இவை போன்றனவுமாகிய உதாரச் செய்கைகள் அவர்களுக்கும், இன்னும் அவரோடு சம்பந்தமுடைய மற்றையவர்களுக்கும் அவரிடம் விசுவாசமுண்டாக்கச் செய்தன. அவர் பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் இராஜ விசுவாசமுடையவர். இராஜாங்க சம்பவங்களை கௌரவமாகவும் அதே சமயம் தமது குடிகளுக்கு நன்மையுண்டாகும் விதமாகவும் கொண்டாடி வருகிறார்.

1913-ம் வருடம் சக்கிரவர்த்தி பிறந்த தினக் கொண்டாட்டப்போது பட்டங்களளிக்கப்பட்ட சமயம் ஊத்துக்குளிபாளையக்காரருக்கு திவான்பகதூர் பட்டம் அளிக்கப்பட்டது. அவர் அதற்குத் தக்க பாத்திரமுடையவர். 1913௵ செப்டம்பர்மீ 21௳ கோயம்பத்தூரில் நடந்த பகிரங்க தர்ப்பாரில் ஜில்லா கலெக்டர் அவருக்குச் சந்நது அளிக்கும்போது பின்வருமாறு கூறினார் :—

"நமது நண்பராகிய ஊத்துக்குளி ஜமீன்தார் ஸ்ரீமான் இராமசாமி காளிங்கராயரைப் பற்றி நான் அதிகமாகக் கூறவேண்டுவதில்லை. இந்நாட்டின் பெரிய பூஸ்திதிக்காரர்கள் எவ்வாறிருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அதற்கு இவர் அத்தாட்சியாயுள்ளவர். கல்வி கற்றிருந்தாலும் இவர் விவசாயத்தை இகழ்ச்சியாகக் கருதவில்லை. இவர் தமது விஸ்தீரணமான பூஸ்திதியை புத்தி நுட்பத்தோடும் சிரத்தையோடும் ஆண்டு வருகிறார். தமது பூமியில் உயர்வான அபிவிருத்தியை யுண்டாக்குகிறார். அதே சமயத்தில் அவர் தமது குடிகளுக்கு மிக்க நண்பராயிருக்கிறார். எல்லாப் பொது விஷயங்களிலும் தலைமை வகித்து நடத்தி வந்திருக்கிறார். அவர் பொது நன்மைக்காகச் செய்த காரியங்கள் அனேகம். அவைகள் பயனளிக்கத் தக்கவை. அவைகளையெல்லாம் நான் இங்கு கூறி யுங்களுக்கு ஆயாசம் உண்டாக்கலாகாது. அதோடு நமது ஜமீன்தார் மிக்க அடக்கமும் ஒடுக்கமுமுடையவர். இவர் தமக்கு நேர்ந்த ஏராளமான பொருட்செலவைக் கவனியாமலே இஜ்ஜில்லாவின் பிரதிநிதியாக டில்லி தர்ப்பாருக்குச் சென்றார்."

இராமசாமி காளிங்கராயர் 1917-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 19, 20-ந் தேதிகளில் நடந்த பிராமணரல்லாதார் சங்கநிகழ்ச்சியில் சிரத்தையெடுத்துக்கொண்டு வேலை செய்தார். தென்னிந்தியாவில் அதுவே முதல் தடவையாகக் கூடிய அத்தகைய சபையாகும். நமது பாளையக்காரர் அதன் வரவழைப்புக் கூட்டத்தின் அக்கிராசனராக விருந்தார்.

இவர் (இப்போது உடைந்துபோய்விட்ட) சென்னை ஜமீன்தாரர்கள் நிலச்சுவான்தாரர்களின் சங்கத்திற்கு உதவி அக்கிராசனாதிபதியா யிருந்தார். இவர் தென்இந்திய லிபரல்பெடரேஷன் சங்கத்தில் ஒரு அவயவியாயிருக்கிறார். புது சீர்திருத்தங்களின் சம்பந்தமாக இந்தியதுரைத்தனத்தின் காரியதரிசியாகிய கௌரவம் பொருந்திய மான்டேக் அவர்களையும், (Right Honorable E. S. Montague, Secretary of State for India) அப்போது இந்தியாவின் இராஜப்பிரதிநிதியாக விருந்த கனம் செம்ஸ்போர்ட் பிரபுவையும் அவர்

களையும் (His Excellency Lord Chelmsford, Governor-General of India.) கண்டு பேசச் சென்றவர்களில் சென்னை இராஜதானியைச் சேர்ந்த ஜமீன்தாரர்கள், பிராம்மணரல்லாதார் இவர்களின் பிரதிநிதிகளாகச் சென்ற அவயவிகளில் முதன்மையானவர்களில் இவரும் ஒருவர்.

இவருடைய பணம் எப்போதும் பொது தர்மங்களுக்கு விநியோகிக்கப் படுகிறது. இவருடைய பொது நல உதாரணம் விசாலமாய்ப் பரவியிருக்கிறது. நைஜாம் இராஜ்ஜியத்திலுள்ள ஆனகொந்தி இராஜா அவர்களே அதைக் கவனித்திருக்கிறாரெனில் நாம் அதிகம் கூறுவது மிகையாகும். அந்த இராஜாவின் தூண்டுதலால் பாளையக்காரர் ஸ்ரீ விவேகவர்த்தினி சபைக்கு மிக்க மகிழ்ச்சியோடு தாராளமான நன்கொடையளித்தார்.

பொது நன்மைக்காக அவர் அளித்த அநேகம் கொடைகளில் சண்டு சிலவற்றைக் கூறுகிறோம் :—

(1) முதல் கூடிய பிராம்மணரல்லாதார் பிரதிநிதிக் கூட்டத்திற்கு 100 ரூபாய்; (2) மூன்றாவது கூடிய பிராம்மணரல்லாதார் கூட்டத்திற்கு 100 ரூபாய்; (3) நான்காவது பிராம்மணரல்லாதார் கூட்டத்திற்கு 100 ரூபாய்; (4) இங்கிலாந்திற்குச் சென்ற பிராம்மணரல்லாதார் கூட்டத்திற்கு 500 ரூபாய்; (5) இங்கிலாந்திற்குச் சென்ற ஜமீன்தார்களின் பிரதிநிதிக் கூட்டத்திற்கு 250 ரூபாய்; (6) மகிமை பொருந்திய சக்கிரவர்த்தி சக்கிரவர்த்தினி அவர்களின் வெள்ளிக் கலியாணத்திற்கு (நமது சஷ்டி பூர்த்திபோன்றது) 200 ரூபாய்; (7) சென்னையில் ஒரு இராஜகுமாரர் கல்லூரியமைப்பதற்காக நன் கொடை 3,000 ரூபாய்; (8) டாக்டர் நாயரின் ஞாபகார்த்த நிதிக்கு 500 ரூபாய்; (9) கனம் பொருந்திய இளவரசரை வரவேற்கும் நிதிக்காக 500 ரூபாய்; (10) குன்னூரிலுள்ள நாய்க்கடி வைத்தியசாலைக்காக 100 ரூபாய்; (11) குன்னூர் லாலீ வைத்தியசாலைக்காக 100 ரூபாய்.

இராஜகுமாரர் கல்லூரிக்கு பாளையக்காரர் அளித்த தாராளமான நன் கொடையாகிய 3,000 ரூபாய் சம்பந்தமாக சென்னை கவர்னர் அவர்களது அந்தரங்கக் காரியதரிசியிடமிருந்து வந்த கடிதத்திலிருந்து சில அம்சங்களை இங்கு குறிப்பிடுவது விரும்பத் தக்கது.

“இந்த இராஜதானியிலுள்ள ஜமீன்தாரர்கள் நிலச்சுவான் தாரர்களுடைய புத்திரர்களும் சுற்றத்தாரும் தங்கள் சுதந்தரங்களையும் பொறுப்புகளையும் மேன்மையான வழியில் உபயோகிப்பதற்குத் தகுதியான கல்வியையவர்களுக் களிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டத் தாபனத்தின் நன்மைக்காகத் தாங்கள் செய்த அன்பார்ந்த உதவியைப் பற்றி கனம் கவர்னரவர்கள் மிக்க மகிழ்ச்சி யடைந்ததை நான்......தங்களுக்கு அறிவிக்கும்படி கட்டளை யிடப் பட்டிருக்கிறேன்.”

நமது பாளையக்காரர் வருட வரியில் 5,000-ரூபாய் செலவழியும்படியான மதத்தாபனங்களைப் பராமரித்து வருகிறார். ஒவ்வொரு வருடமும் தவறாத் திருவிழாவைக் கொண்டாடுவதோடு ஒரு தர்பாரும் நடத்துகிறார். அதைப் பற்றி “மதராஸ் மெயில்” பத்திரிகையில் 23—10—1912-ல் வெளியான சங்கதியை மீண்டு கூறுகிறோம்:—

“ ஊத்துக்குளி ஜமீனில் தசராபண்டிகையின் கொண்டாட்டம் 1912௵ அக்டோபர்௴ 11௳ தொடங்கப்பட்ட சந்திர சாலாவின் ஒரு பாகத்தில் அது அழகாய் அலங்கரிக்கப் பட்ட ஒரு மண்டபத்தில் வேத பாராயணங்களுக் கிடையில் அம்மன் எழுந்தருளச் செய்யப்பட்டது. மற்றொரு பாகம் ஜமீன்தார் தர்பார் நடத்துவதற்காக விடப்பட்டிருந்தது. ஜமீன்தார் தமது குடும்பத்தோடு வழக்கப்படி தேவாராதனையைச் செய்தபின் பிரதியிரவும் தர்பார் நடத்தினர். ஜமீன்தார் தர்பார் மண்டபத்தில் வந்து உட்கார்ந்ததும் எல்லாக் கோயில் களிலிருந்தும் பிரசாதம் அவருக் களிக்கப்பட்டது. அவருடைய காவலர்கள் அரை இராணுவ முறைமையில் அவருக்கு மரியாதை செய்தார்கள். அதன் பிறகு ஜமீனைச் சேர்ந்த குடிகளனைவரும் தங்கள் மரியாதையைச் செலுத்தினர்கள். அதன்மேல் சங்கீதக் கச்சேரிகளும், நடனக் கச்சேரிகளும் நடந்தன. பாகவதர்களாலும் மற்றவர்களாலும் பிரதி மாலையும் காலக்ஷேபங்கள் நிகழ்ந்தன. தினம் அநேகம் பேர்க்கு அன்னமளிக்கப் பட்டது. இவ்வாறு ஒன்பது நாட்கள் நடந்தது. பத்தாவது நாள் மிக்க உன்னதமான சடங்கு நடந்தது. காலையில் தேவியைப் பூஜித்தபின் ஜமீன்தார் ஒரு தர்பார் நடத்தினர். அப்போது, அவர் முன்னோர்கள் இராணுவத் தலைவர்களாக அப்பிரதேசத்தை யாண்டு வந்தார்கள் என்பதன் அறிகுறியாக ஒரு ஈட்டியும் கத்தியும் அவருக்களிக்கப் பட்டன.”

கடந்த ஐரோப்பா யுத்தம் தொடங்கியதே பாளையக்காரர் பிரிட்டிஷ் இராஜாங்கத்திற்குத் தாம் கலங்காத பக்தியும் விசுவாசமும் உடைத்தாயிருப்பதாகவும், பிரிடிஷாரின் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்வதாகவும் சென்னை கவர்னருக்கும் இராஜப் பிரதிநிதிக்கும் தந்தி கொடுத்தார். அவர் சென்னை யுத்த நிதிக்கு 500 ரூபாயும் இராஜப்பிரதிநிதியின் இந்திய கஷ்ட நிவாரண நிதிக்கு 500 ரூபாயும் அளித்தார். சென்னை கவர்னராகிய கனம் பெண்ட்லெண்ட் பிரபு 28—8—1914-ல் “ உமது பெருந்தன்மையான உதவிக்கு மனமார்ந்த வந்தனம்” என்று பிரியத்தோடு பாளையக்காரருக்குத் தந்தியனுப்பினர். இராஜாங்கக் கஷ்ட நிவாரண நிதியின் கௌரவக் காரியதரிசி 29—8—1914-ல் “ தாங்கள் வெளியிட்ட இராஜபக்திக்கும் இந்திய கஷ்ட நிவாரண நிதியின் சென்னைக் கிளை நிதிக்கு 500 ரூபாய் நன்கொடை யளித்ததற்காகவும் உமக்கு வந்தனமளிக்குமாறு நான் விரும்பப்படுகிறேன்” என்று தந்தி கொடுத்தார். சென்னை யுத்த நிதியின் காரியதரிசி பின்வருமாறு பதிலளித்தார் :—

“ துரைத்தனக் காரியாலயம்”
நீலகிரி, 14-9-1914.

சென்னை யுத்த நிதிக்கு 500 ரூபாயும், இராஜப் பிரதிநிதியின் இந்திய கஷ்ட நிவாரண நிதிக்கு 500 ரூபாயும் ஆக 1,000 ரூபாய்க்குத் தாங்கள் உண்டி. (செக்) அனுப்பியதற்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன்.”

1914௵ செப்டம்பர்௴ 4௳ பொள்ளாச்சி தாலூக்காவைச் சேர்ந்த முக்கியமான பெரிய மனிதர்கள் மற்ற ஜனங்கள் இவர்கள் கூட்டமாகக் கூடிய ஒரு சபை நிகழ்ந்தது. இச்சபை யுத்த நிதிக்குப் பணம் வசூல் செய்வதற்

காகப் பொள்ளாச்சி சப் கலெக்டராகிய மிஸ்டர் மக்குவின் என்பவருடைய அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அச்சபைக்கு ஊத்துக்குளி பாளையக்காரரும் அவர் குமாரராகிய குமாரப் பாளையக்காரரும், அவர் மருமகர் சமத்தூர் கோட்டம்பட்டிப் பாளையக்காரரும் சென்றிருந்தார்கள். சமத்தூர் பாளையக்காரரும் ஊத்துக்குளி குமாரப் பாளையக்காரரும் தலைக்கு 500 ரூபாய் யுத்தநிதிக்களித்தார்கள்.

ஊத்துக்குளிப் பாளையக்காரர் தமது செல்வாக்கை யுபயோகித்து அங்கு வந்திருந்தவர்களில் அனேகரை யுத்த நிதிக்குத் தாராளமாய்ப் பணமளிக்குமாறு தூண்டினர். அவர் 1915௵ பெண்ட்லெண்ட் சீமாட்டியின் சென்னை யுத்த நிதிச்சாலைக்காக 100 ரூபா யளித்தார். சென்னை யுத்த நிதியின் கௌரவக் காரியதரிசி பின் வருமாறு பதில் அனுப்பினர் :—

" தங்கள் இம்மாத 4-ந் தேதி கடிதத்திற்காக மிக்க வந்தனமளிக்கிறோம். கவர்னரவர்கள் தமது முயற்சியில் தாங்கள் உதவி புரிவதாக வாக்களித்ததற்குத் தாம் நன்றி பாராட்டுவதாகத் தமக்குக் கூறும்படி என்னைக் கேட்டுக்கொண்டார். தாங்கள் சீமாட்டியின் சென்னை யுத்த நிதிக்காக 100 ரூபாயனுப்பி யிருக்கிறீர்களென்பதைக் குறிப்பிடுகிறேன்.

பாளையக்காரர் சென்னை வைத்தியக் கப்பலுக்காக 100 ரூபா யளித்தார். 1917௵ ஊத்துக்குளி பாளையக்காரணி (பாளையக்காரர் மனைவி)யும், அவர் புத்திரியாகிய சமத்தூர் பாளையக்காரணியும் அவர் மருமகளாகிய ஊத்துக்குளி குமாரப்பாளைய காரிணியும் ஒவ்வொருவரும் சீமாட்டியின் ரூபாய் நிதிக்குத் தாராளமாய் பணமளித்தார்கள். சென்னை கவர்னரின் இராணுவக் காரியதரிசி 1916௵ மேமீ 19௳ அனுப்பிய கடிதத்தைக் கீழே குறிப்பிடுகிறோம் :—

' சென்னை ' என்ற வைத்தியசாலைக் கப்பலுக்காகப் பொருள் வேண்டுமென்று நாம் கேட்டதற்கு தாங்கள் இரண்டாம் முறையாக 100 ரூபாய் கோட் வைத்தனுப்பிய கடிதம் சேர்ந்தது. தமது அபிமானம் பொருந்திய உதவிக்காக அவரது மனமார்ந்த வந்தனங்களை யறிவிக்கும்படி கனம் கவர்னர் அவர்கள் எனக்குக் கூறினர்கள்.

பாளையக்காரர் 5—5—1915-இல் வைத்தியசாலைக் கப்பல் நிதிக்காக சென்னை கவர்னர் அவர்களின் இராணுவ காரியதரிசிக்கு 150-ரூபாய் அனுப்பினர். சென்னைக் கவர்னரின் இராணுவக்காரிய தரிசியிடமிருந்து கீழ்க்கண்ட பதில் வந்தது:—

" சென்னை யுத்த நிதியின் அக்கிரா சனாதிபதியாகிய கனம் பெண்ட்லெண்ட் பிரபு அவர்கள், சென்னை வைத்தியசாலைக் கப்பலுக்காக தாங்கள் அனுப்பிய 150-ரூபாய்க்காக மிக்க அன்போடு தங்களுக்கு வந்தன மளிக்க விரும்புகிறார். இந்த இராஜதானியிலுள்ள எல்லா வகுப்புச் சனங்களும் பெருந்தன்மையோடு இடைவிடாது செய்யும் உதவி எவ்வளவு அவசரமாக இக்கப்பல் வேண்டி யிருக்கிறது என்பதையும், அது தன் ஜீவகாருணிய மான வேலையைச் செய்வதற்காக அதை நல்ல உயர்ந்த நிலைமையில் அமைப் பதற்கு

காம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டு மென்பதையும் அவர்கள் கண்டறிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அத்தாட்சியாக விருக்கிறது."

பாளையக்காரர் யுத்த நிதியில் 1918-ம் ஆண்டு 15,000-ரூபாய் விலைக்கு வாங்கினர்.

இப்போது நமது பாளையக்காரர் தமது பகிரங்க விவகாரங்களிலிருந்து விலகி விட்டார். அவர் கொடைக் கானலில் ஒரு ஆஸ்தியையும் கொன்னூரில் ஒரு ஆஸ்தியையும் விலைக்கு வாங்கிக்கொண்டு, இப்போது, அந்த இரண்டு சுகாதார ஸ்தலங்களிலும் நிம்மதியாகவும், ஈசுர சிந்தனை யோடும் தமது காலத்தைக் கழித்து வருகிறார். அவர் தெய்வ உண்மையைப் பற்றிய ஆராய்ச்சி செய்வதிலும் அதைப்பற்றிய கல்வியைக் கற்பதிலும் கிரமமாய்க் கவனத்தைச் செலுத்தி வருகிறார். அவர் பகவத்தியானம் செய்வதில் விருப்ப முடையவ ராகவும் மேலான ஆன்மார்த்த பதவியை யடைய ஆவலுள்ளவராகவு மிருக்கிறார்.

## ஊத்துக்குளி குமாரப் பாளையக்காரர்

ஸ்ரீ அகத்தூர் முத்துகிருஷ்ணசுவாமி காளிங்கராயர், ஊத்துக்குளிஜமீன்தாரின் மூத்த குமாரரும், பாளையத்தின் வாரிசுதாரருமாக இருப்பவரே, தமது தந்தை இலௌகிக விவகாரங்களை விட்டு விட்டபின், பாளைய நிர்வாகத்தை வகித்து வருகிறார். அவர் 1919ஆ மெசபொடேமியாவில் யுத்தத்திற்காகச் சேனைக்கு ஆட்களைச் சேர்த்த விஷயத்தில் முதன்மை யாகச் சிரத்தை யெடுத்துக் கொண்டார். அவர் பொள்ளாச்சி தாலுக்காவில் சேனைக்கு ஆட்களைச் சேர்ப்பதில் கௌரவ உதவி உத்தியோகஸ்தராக நியமிக்கப் பட்டார். அவர் கோயம்பத்தூர் ஜில்லாவிலிருந்து, முக்கியமாகப் பொள்ளாச்சித் தாலுக்காவி லிருந்து மிக்க அதிகமான ஆட்களைச் சேர்த்தார். யுத்தத்திற்காக ஆட்களைச் சேர்ப்பதில் அவர் செய்த உயர்ந்த வேலைக்காக அவருடைய கன்னியத்திற்கு ஒரு நற்சாட்சி பத்திரமும் ஒரு பதக்கமும் அளிக்கப்பட்டன. அவருக் களிக்கப்பட்ட சந்நது பதக்கம் இவற்றில் குறிப்பிட்ட வற்றின் நகல் பின் வருமாறு :—

“ ஊத்துக்குளி குமார ஜமீன்தாரரும், கோயம்பத்தூர் ஜில்லா சங்கத்தின் ஒரு அவயவியு மாகிய ம-ா-ா-ஸ்ரீ அகத்தூர் முத்து கிருஷ்ணசுவாமி காளிங்கராயர் அவர்களுக்கு மகாயுத்தத்தின்போது ஆட்களை படைக்குச்சேர்ப்பதில் செய்த தொண்டிற்காக அளிக்கப்பட்ட பதக்கம்.

(கையொப்பம்) A. H. பிங்லே, மேஜர் ஜனரல்,

இந்திய துரைத்தனத்தின் இராணுவ இலாகா காரியதரிசி.

1919ஆ டிசம்பர்மீ 10உ

ம-ா-ா-ஸ்ரீ அகத்தூர் முத்து கிருஷ்ணசுவாமி காளிங்கராயர் அவர்களுக்கு, மகாயுத்தத்தில் இந்தியமகா சைனியத்திற்கு அவர் செய்த தொண்டுகளுக்காகவும் அவற்றை சிலாகித்துக் கொண்டதன் அறிகுறியாகவும் இந்திய இராஜ பிரதிநிதி யவர்களது கட்டளைப்படி இச்சந்நது அளிக்கப் பட்டது.


(கையொப்பம்) A. H. பிங்லே, மேஜர் ஜெனரல்,

இந்திய இராஜாங்கத்தின் இராணுவ இலாகா காரியதரிசி.

ஸிம்லா 1920ஆ ஆகஸ்ட்மீ 3உ

யுத்தம் நேர்ந்த காலத்தில் சேனைக்கு ஆட்களைச் சேர்ப்பதில் குமார பாளையக்காரர் காட்டிய அபிமானத்தையும் உற்சாகத்தையும் கண்டு சென்னை கவர்னர் அவர்கள் மிக்க மகிழ்ச்சி யடைந்து அவருக்குக் கொஞ்ச காலத்திற்கு இராணுவத்தில் (Temporary Commission) ஒரு உத்தியோகஸ்தர் வேலை யளிக்கப் பிரியப்பட்டார். ஆனால் துரதிஷ்டமாய், தமது தந்தை இலௌகிகத் தொழிலை விட்டுவிட்டதால், பாளையப்பட்டைத் தாமே நிர்வாகிக்க வேண்டிய பொறுப்பிருப்பதன் நிமித்தம், அப்பதவியை யேற்றுக்கொள்ளக்கூடாதவராக விருந்தார்.

குமாரப்பாளையக்காரர் பொதுவிஷயங்களில் முன்னின்று சிரத்தை யெடுத்துக்கொள்கிறார். அவர் கோயம்பத்தூர் நீதிமன்றத்தில் ஒரு கௌரவ மாஜிஸ்



POLIGAR OF UTTUKULI

KUMARA POLIGAR OF UTTUKULI M. R. N. KALINGARAYAR



SRI A. MUTHUKRISHNASWAMI KALINGARAYAR, KUMARA POLIGAR OF UTTUKULI

ஸ்ரீ அ. முத்துகிருஷ்ணசாமி காளிங்கராயர், குமாரபாளையக்காரர்—ஊத்துகுளி.



SRI M. R. NATARAJA KALINGARAYAR

டிரெட்டாக நியமிக்கப்பட்டார். இன்னும் அவருடைய பொது ஊழியங்களுக்காக அவர் 1920ஞு ஆகஸ்ட்மீ 22உ முதல் பொள்ளாச்சி தாலுக்கா சபையின் முதல் உத்தியோகஸ்தரல்லாத அக்கிராசனராக நியமனம் பெற்றார்.

இவர் "மௌண்ட் லாட்ஜ்" என்ற பரங்கிமலையிலுள்ள ப்ரீ மேஸன் சங்கத்தைச் சேர்ந்தவர். அதன் கட்டிட நிதிக்காக 300 ரூபா யளித்தார். 1919ஞு நவம்பர்மீ கனம் செம்ஸ்போர்ட் பிரபு அவர்கள் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது இவர் அங்கிருந்து அவரது வருகையைக் கௌரவப்படுத்துவதற்காக நடந்த எல்லா பகிரங்க விவகாரங்களுக்கும் சென்றிருந்தார். இராஜப் பிரதிநிதியையும் அவர் பத்தினியையும் சந்திப்பதற்காகக் கவர்னரின் விருந்து மண்டபத்தில் நிகழ்ந்த வரவேற்புக் கொண்டாட்டத்திற்குச் சென்றிருந்து அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். 1921ஞு ஜனவரிமீ கானட்டுக்கோமகனர் விஜயம் செய்திருந்தபோது நடந்த பலவிதச் சடங்குகளுக்கும் சம்பவங்களுக்கும் சென்றிருந்தார். மேற்படி கோமகனுக்கு ஸெனெட் ஹௌஸில் அளிக்கப்பட்ட விருந்தின்போது சென்றிருந்தவர்களில் அவரும் ஒருவராக விருந்ததோடு சென்னை ஜமீன்தார் சங்கத்தில் சேர்ந்தவர்களில் ஒருவர் என்று கோமானுக்கு அறிமுகமாக்கப்பட்டவர்களில் இவரும் ஒருவர். இங்கிலாந்தின் பெரிய ஐக்கிய மெஸானிக் சங்கத்தின் பிரதமத் தலைவராகிய கானட்டுக் கோமகனரைக் கௌரவப்படுத்தச் சென்னைக்கவர்னர் அவர்களின் விருந்துமண்டபத்தில் நடந்த கொண்டாட்டத்திற்கு இவரும் சென்றிருந்தார்.

1922ஞுஜனவரிமீ இளவரசர் சென்னைக்கு விஜயம் செய்திருந்த போது குமாரப் பாளையக்காரர் அங்கு சென்றிருந்து அது சம்பந்தமான எல்லா சம்பவங்களிலும் கலந்து கொண்டார்.

பிராம்மணரல்லாதார் சங்கத்தில் குமாரப் பாளையக்காரர் மிக்க சிரத்தையும் ஊக்கமும் எடுத்துக் கொள்ளுகிறார். அவர் சென்னையிற் கூடிய எல்லா பிராம்மண ரல்லாதார் சங்கங்களுக்கும் சென்றிருந்ததோடு வரவழைப்புச் சபையில் ஒரு அங்கத்தவராகவு மிருந்தார்.

ஸ்ரீ நடராஜ காளிங்கராயர் ஊத்துக்குளிப் பாளையக்காரரின் இளைய புத்திரர். ஸ்டேன் ஐரோப்பிய உயர் தரக் கலாசாலையின் "பிறகும் இப்போதும்" என்ற சஞ்சிகையில் உள்ளதின் சாராம்சத்தை யீண்டு கூறுகிறோம் :—

"ஊத்துக்குளி ஜமீன்தாரரின் இளைய புத்திரராகிய இன்னொரு சிறுவரை நாம் ஆழ்ந்த துயரத்தோடு இழக்கிறோம். அவர் பூரணமானப் பெரிய மனிதராகவும் யாவராலும் அதிகமாக விரும்பப் பட்டவராகவு மிருந்தார். அவர் உயர்தரக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைப் பரீட்சைக்காகத் தயார்செய்து கொள்ள எங்களை விட்டுப் பிரிந்து போன சொல்ப காலமாகிய ஆறுமாதங்கள் தவிர பூராகப் பத்து வருடம் எங்களோடிருந்தார். அவர் தம் கல்வியில் செய்த அபிவிர்த்தி அபூர்வமானது. அவர் ஆறுமாதங்கள் எங்களைப் பிரிந்த பின் எங்களிடம் திரும்பி வந்து உயர்தரக் கலாசாலைக்கும், உயர்தர கேம்பிரிட்ஜ் கல்லூரிக்கும் வேலை செய்தார்.

அவருக்கு உயர்தரக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக் கல்வி மிக்க முக்கிய மானதாக விருந்ததால் அவர் மிக்க கஷ்டப்பட்டு அதற்காக உழைத்தார். முக்கியமாய்ப் பரீட்சை நடப்பதற்குப் பதினெட்டு மாதங்களே யிருக்கையில் அவர் லாடின் கல்வியை யாரம்பித்ததால் அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அவரும் அப்பாடசாலையும் உயர்தரப் பரீட்சையில் முதல் தரத்தை யிழந்ததற்கு வெகுவாக இதுவே காரணமாகும். அவர் பாடசாலையில் சேர்ந்த ஆதிகால முதல் பாடசாலையைச் சேர்ந்த விளையாட்டுகளி லெல்லாம் மிக்க உற்சாகத்தோடு கலந்து கொண்டிருந்தார். காற்பந்து, ஹாக்கே, கிரிகட் முதலிய மேல் நாட்டுப் பந்து விளையாட்டுகளில் கௌரவம் பெற்றார். அத்தகைய விளையாட்டுகளில் அவர் முதல் முதலாகச் ஜெயமடைந்து 1911ஹு த்தில் அப்போது ஒரு கால் மைல் ஓட்டப் பந்தயத்தில் இரண்டாவதாக விருந்தார்.

அடுத்த வருடம் 100-கஜ ஓட்டப் பந்தயத்தில் அவர் முதல் ஸ்தானத்தை வகித்தார். 1919ஹு அவர் ஊத்துக்குளி கிரிகெட் விளையாட்டில் ஜெயத்தோடு விளையாடினார். அது விளையாடப் படும் எல்லா சமயங்களிலும், கிரிக் ஞாபகச் சின்ன பந்தயங்களில் ஓட்டப் பந்தயம் நடக்கும் போதும் அவர் எப்போதும் நினைக்கப் படுவார். ஏனெனில் இந்த இரண்டிலும் அவருடைய தந்தையாகிய ஊத்துக்குளிப் பாளையக்காரர் அவர்களால் அவருக்குச் ஜெயக் குறிகள் அளிக்கப்பட்டன (1919ஹு பிப்ரவரிமீ 1உ முதல் 1919ஹு ஜூலைமீ 18உ வரையிலும், 1920ஹு ஜனவரிமீ 24உ முதல் 1920ஹு டிசம்பர்மீ 31உ வரையிலும்)

அவர் 1920ஹு நூரைத்தன உயர்தரக் கல்விச்சாலையின் பரீட்சையில் இரண்டாவது வகுப்பில், இராஜதானியில் ஏழாவதாக இரண்டு கௌரவங்களோடு தேறினார்.

அவர் 1918ஹு நூரைத்தன மிட்ல் ஸ்கூல் பரீட்சையில் முதல் வகுப்பில் ,இராஜ தானியில் மூன்று கௌரவங்களோடு ஆறுவதாக தேறினார்.

| | | |
|---|---|---|
| காற்பந்து விளையாட் | 1-ல் | 11—1919, 1920. |
| ஹாக்கே | 1-ல் | 11—1919, 1920. |
| கிரிகெட்—1-ல் | | 11—1919 மட்டும். |

1922ஹு ஏப்ரல்மீ 15உ ம-ள-ள-ஸ்ரீ நடராஜக் காளிங்கராயர் ஆகஸ் போர்ட் சர்வ கலாசாலையில் ஐ. ஸி. யஸ் (I. C. S.) என்ற இந்தியன் ஸிவில் ஸர்விஸ் என்னும் கலக்டர் பரீட்சைக்காக வாசிக்கவும் நியாய துரந்தராகவும் (பாரிஸ்டர் பரீட்சையில் தேறவும்) இங்கிலாந்திற்குச் சென்றார். அவர் செல்வம் நிறைந்த குடும்பத்தில் ஜனித்தவராயினும் கல்வியில் மிக்க ஆவலுடையவர். அவர் இங்கிலாந்திலிருந்து கௌரவங்களோடு திரும்பி வந்து, தாம் பிறந்த பிரபு குடும்பத்தின் கீர்த்தியை விர்த்தி செய்வார் என்பதற்கு இதுவே அத்தாட்சியாகும்.

பூரணமான பெரிய மனிதர்களாகிய புத்திரர்களை யடைந்ததற்காக ஊத்துக்குளிப் பாளையக்காரர் சந்தேகமின்றி அதிஷ்டசாலியே. குடும்பத்தின் இரண்டாவது தலைவராகிய ஸ்ரீ கிருஷ்ணசுவாமி காளிங்கராயர் தமது குடிக

ளிடத்தும் பொதுஜனங்களிடத்தும் முன்னமே விசுவாசமுடையவராக விருந்திருக்கிறார். அவர் காலத்தில் பிரசித்தி பெற்ற அவர் குடும்பம் சந்தேகமின்றி மாசற்றதாகவே யிருக்கும்.

மேற்காணும் ஜாபிதா ஆதிகாலத்தில் ஊத்துக்குளி பாளையத்தைத் தாபித்தவர் முதல் முப்பத்து மூன்றுவது பாளையக்காரர் வரையில் அப்புராதன குடும்பத்தின் வரிசைக் கிரமத்தை காட்டுகிறது:—

| வரிசைக் கிரமம். | பாளையக்காரரின் பெயர். | ஆண்ட காலம். |
|---|---|---|
| 1 | காளிங்கராயர் ... | 50 வருடங்கள் |
| 2 | புத்திரர் - நஞ்சைய காளிங்கராயர் ... | 40 ,, |
| 3 | ,, அகத்தூர் காளிங்கராயர் ... | 26 ,, |
| 4 | ,, நஞ்சைய காளிங்கராயர் ... | 20 ,, |
| 5 | ,, காளிங்கராயர் ... | 19 ,, |
| 6 | ,, நஞ்சைய காளிங்கராயர் ... | 21 ,, |
| 7 | சகோதரர்-அகத்தூர் காளிங்கராயர் ... | 12 ,, |
| 8 | புத்திரர்-காளிங்கராயர் ... | 23 ,, |
| 9 | ,, பராக்கிரம நஞ்சைய காளிங்கராயர் | 27 ,, |
| 10 | ,, அகத்தூர் காளிங்கராயர் ... | 16 ,, |
| 11 | ,, காளிங்கராயர் ... | 9 ,, |
| 12 | ,, நஞ்சைய காளிங்கராயர் ... | 28 ,, |
| 13 | ,, விருமாண்ட காளிங்கராயர் ... | 30 ,, |
| 14 | சகோதரர்-அகத்தூர் காளிங்கராயர் ... | 19 ,, |
| 15 | புத்திரர் - காளிங்கராயர் ... | 20 ,, |
| 16 | ,, ஈஸ்வரமூர்த்தி காளிங்கராயர் ... | 6 ,, |
| 17 | ,, காளிங்கராயர் ... | 15 ,, |
| 18 | ,, அகத்தூர் காளிங்கராயர் ... | 31 ,, |
| 19 | ,, விருமாண்ட காளிங்கராயர் ... | 23 ,, |
| 20 | ,, முத்து காளிங்கராயர் ... | 13 ,, |
| 21 | ,, சின்னைய காளிங்கராயர் ... | 19 ,, |
| 22 | ,, காளிங்கராயர் ... | 20 ,, |
| 23 | ,, நஞ்சைய காளிங்கராயர் ... | 30 ,, |
| 24 | ,, காளிங்கராயர் ... | 26 ,, |
| 25 | சகோதரர்-நஞ்சைய காளிங்கராயர் ... | 12 ,, |
| 26 | புத்திரர்-காளிங்கராயர் ... | 29 ,, |
| 27 | ,, நஞ்சைய காளிங்கராயர் ... | 2 ,, |
| 28 | சகோதரர்-அகத்தூர் காளிங்கராயர் ... | 4 ,, |
| 29 | ,, குமாரசுவாமி காளிங்கராயர் ... | 30 ,, |
| 30 | புத்திரர்-முத்துக்குமாரசுவாமி காளிங்கராயர் | 19 ,, |

| வரிசைக் கிரமம். | பாளையக்காரரின் பெயர். | ஆண்ட காலம். |
|---|---|---|
| 31 | புத்திரர்-முத்துக்கிருஷ்ணசுவாமி காளிங்கராயர், 1832ஃ ஜனித்தவர். 23-4-1874 காலஞ் சென்றவர். | 34 வருடங்கள் |
| 32 | புத்திரர் - சிவசுப்பிரமணியத் திருமூர்த்தி காளிங்கராயர், 1857 வருடம் ஜனித்தவர். 1881ஃ காலகதி யடைந்தவர் ... | 7 ,, |
| 33 | சகோதரர்-முத்து இராமசுவாமி காளிங்கராயர், 1864ஃ ஜனவரிமீ 24௳ பிறந்தார். 1881ஃ ஆளத் தொடங்கினார். | |

PRINTED BY P. SHUNMUGAM AND CO,, MOUNT ROAD, MADRAS.